மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, இந்த அவையில் வைக்கப்பட்டுள்ள தொழுநோய்ப் பிச்சைக்காரர்களுக்கு மறுவாழ்வு அளிப்பதற்கு வசதியான திருத்தத்தை அநேகமாக எல்லாக் கட்சிகளின் சார்பிலும் ஆதரித்து, வரவேற்று, வரவேற்கும் நேரத்திலே சில அரிய யோசனைகளையும் இந்த இல்லங்கள் எப்படி நடைபெற வேண்டுமென்ற வகையிலே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அந்த யோசனைகளை அரசும் தொடர்புடைய துறையும் அதிகாரிகளும் ஆராய்ந்து பார்த்து ஏற்றவைகளைச் செய்வதற்கு இயலும் என்பதை நான் முதலில் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தியாவிலே, தமிழ்நாட்டிலேதான் தொழுநோயாளிகள் அதிகம் இருக்கிறார்கள் என்கின்ற புள்ளி விவரம் அண்மையிலே வெளியிடப்பட்டது. இந்த அவையில் திரு. ஹாண்டே அவர்களாலும், திரு. கே. எம். சுப்பிரமணியம் அவர்களாலும், மற்றவர்களாலும் எடுத்துச் சொல்லப்பட்டது. அந்தப் புள்ளி விவரத்தில், தமிழ்நாட்டிலே 7.6 இலட்சம், ஆந்திராவிலே 6 இலட்சம், வங்காளத்திலே 6 இலட்சம், ஒரிசாவில் $4\frac{1}{2}$ இலட்சம், மத்திய பிரதேசத்தில் $1\frac{1}{2}$ இலட்சம், இதர பகுதிகளில் மொத்தம் 1 இலட்சம் என்று போடப்பட்டிருக்கிறது. இந்த மாநிலங்களைப் பற்றிய கணக்கு இது. மற்ற மாநிலங்களைப் பற்றி கணக்கிடப்பட்டிருக்கிறதா என்ற விவரம் நம்மிடத்திலே இல்லையென்றாலும் ஆந்திராவைவிட, வங்காளத்தைவிட, 1 இலட்சத்திற்கு மேற்பட்டவர்கள், தொழுநோயாளிகளாகத் தமிழகத்திலே இருக்கிறார்கள் என்றாலும் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரவர்கள் இங்கே அளித்த விளக்கத்திற்கேற்ப இந்தத் தொழு நோயைக் குணப்படுத்துவதற்கும், வராமல் தடுப்பதற்கும் தொடக்க காலத்திலேயே அதைத் தடுத்து அது விரிவடையாமல், பரவாமல் இருப்பதற்கும் ஏற்ற முயற்சிகள் நல்வாழ்வுத் துறையின் வாயிலாக எடுத்துக் கொள்ளப்பட்டு வருகின்றன.

இதற்கிடையிலேதான் எந்த வசதியும் வாய்ப்பும் இல்லாமல் பிச்சை எடுப்பதைத் தங்களுக்கு உகந்த ஒரு தொழிலாகக் கொண்டு, தங்களுக்கு வந்துவிட்ட தொழுநோயையே இந்தப் பிச்சை எடுக்கும் தொழிலுக்கு மூலதனமாக வைத்துக் கொண்டு சிலர் நம்முடைய தமிழ்நாட்டுத் தெருக்களிலே அலைந்து திரிவதை முதல் கடமையாக நீக்கிட வேண்டுமென்ற முயற்சி 1971-ம் ஆண்டு இந்த அரசின் சார்பிலே மேற்கொள்ளப்பட்டது.

மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சரவர்கள் குறிப்பிட்டார்கள், 'ஏற்பது இகழ்ச்சி' ஆகவேதான் இந்தக் காரியத்தை இந்த அரசு செய்கிறது என்று. 'ஏற்பது இகழ்ச்சி'— பிச்சை எடுக்கிறவர்களுக்குக் கூட இகழ்ச்சி அல்ல. நம்முடைய நாட்டில், சமுதாயத்திலே இருக்கிற ஒரு பகுதியினர் ஏற்பது,

1975 ஏப்ரல் 16 ] [டாக்டர் மு. கருணாநிதி]

பிச்சை எடுப்பது இகழ்ச்சி. யாருக்கு என்றால், அதைப் பார்த்துக் கொண்டிருக்கிற நமக்கெல்லாம் இகழ்ச்சி என்கின்ற அந்த வகையிலேதான் நாம் இந்த முயற்சிகளை மேற்கொள்ளத் தொடங்கினோம்.

நம்முடைய ஆளும் காங்கிரஸ் கட்சியினுடைய சார்பிலே பேசிய நண்பர் மாரிமுத்து அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். 1945-ம் ஆண்டிலே இருந்து இந்தச் சட்டம் இருக்கிறது என்று திரு. பொன்னப்ப நாடார் அவர்களும் குறிப்பிட்டார்கள். இந்தச் சட்டம் அமுலாக்கப்பட முடியாத நிலைமையையும், அது ஏற்பட்டதையும் குறிப்பிட்டார்கள். சட்டங்களை இயற்றி விடுவது சுலபம்தான். ஆனால், அந்தச் சட்டங்களை அமுலாக்குகிற நேரத்தில் அந்தச் சட்டத்தால் பாதிக்கப்படுபவர்கள்—பாதிக்கப்படுபவர்கள் என்று சொல்வது பயன் பெறுகிறவர்கள் என்ற பொருளிலும் கொள்ளலாம்—அவர்கள் இந்தச் சட்டத்தால் பாதிக்கப்படுகிற நேரத்தில், அல்லது பயன்படுகிற நேரத்தில், அதற்கான மாற்றுத் திட்டங்கள் இல்லாத காரணத்தாலே அவை பயனற்றுப் போய் விடுகின்றன. அந்தச் சட்டங்கள் நடைமுறைக்கு வராமல் போய் விடுகின்றன.

தெருவிலே பிச்சை எடுப்பதைத் தடுப்பது, அவர்களைக் கைது செய்வது, குற்றவாளிக் கூண்டிலே நிறுத்துவது, சில மாதங்களுக்குத் தண்டனை அளிப்பது, மீண்டும் அவர்களை வெளியிலே விடுவது என்று இருந்தால், அது தொடர்ந்து நடைபெற்று வருகின்ற ஒரு சுற்று நிகழ்ச்சியாகவே இருந்து விடக்கூடும். ஆகவே, அந்தச் சட்டங்களை நடைமுறைப் படுத்துகிற நேரத்தில், இந்தச் சட்டத்தால் பாதிக்கப்படுகிற பிச்சைக்காரர்களில் நாம் முதல் கட்டமாக எடுத்துக் கொண்டிருக்கிற தொழுநோய்ப் பிச்சைக்காரர்களுக்கு மாற்றுத் திட்டமாக இல்லங்களை அமைப்பது, அதிலே அவர்களுக்குப் புதிய வாழ்வைத் தருவது, மறுவாழ்வு தருவது என்று செங்கல்பட்டிலே பரனூரிலும், தென்னாற்காடு மாவட்டத்திலே உளுந்தூர்பேட்டையிலும், தருமபுரி மாவட்டத்திலே பர்கூரிலும், புதுக்கோட்டையிலும், தஞ்சை மாவட்டத்திலே மனையேரிப் பட்டியிலும், மதுரை மாவட்டத்திலே புதுப்பட்டியிலும், வட ஆற்காடு மாவட்டத்திலே மல்லவாடியிலும் கோவையிலே விண்ணப்பள்ளியிலும், சேலம் மாவட்டத்திலே தேவியாகுறிச்சியிலும், தருமபுரி மாவட்டத்தில் செல்லியம்பட்டியிலும் இந்த மறுவாழ்வு இல்லங்களை நாம் அமைத்திருக்கிறோம்.

அங்கே ஆட்களே இல்லை என்றெல்லாம் கூட சில உறுப்பினர்கள் இங்கே பேசும் பொழுது குறிப்பிட்டார்கள். நான் மொத்தமாகச் சொல்லவேண்டுமானால் இந்த 10 இல்லங்களிலேயும் 3,406 தொழுநோய்ப் பிச்சைக்காரர்கள் இருக்கிறார்கள்.

மாவட்ட வாரியாகச் சொல்லவேண்டுமானால் பானூரில் 385 பேரும், உளுந்தூர் பேட்டையில் 351 பேரும், பர்கூரில் 277 பேரும், புதுக்கோட்டையில் 416 பேரும், மனையேரிப்பட்டியில் 424 பேரும், புதுப்பட்டியில் 439 பேரும், மல்லவாடியில் 296 பேரும், விண்ணப்பள்ளியில் 246 பேரும், தேவியாகுறிச்சியில் 381 பேரும், சொல்லியம்பட்டியில் 191 பேரும் மொத்தம் 3,406 பேர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்குத் தொழில்கள், விவசாய வேலைகள் இவைகள் எல்லாம் தரப்பட வேண்டுமென்று பொன்னப்ப நாடார் அவர்களும், ஜோதி அம்மையார் அவர்களும், மாரிமுத்து அவர்களும், மற்றவர்களும் இங்கே சுட்டிக் காட்டினார்கள்.

இதுவரையிலும், 1971 ஆம் ஆண்டுக்குப் பிறகு, அவர்களுக்கு வழங்கப்பட்ட தொழில்களின் காரணமாக நடந்தேறிய பணிகளைப் பார்த்தால் அவர்களால், தொழுநோய்ப் பிச்சைக்காரர்களால் முடையப்பட்ட பாய்களின் எண்ணிக்கை 7,330. அவர்கள் தைத்த ஆடைகளின் எண்ணிக்கை 5,150. அங்கே அமைக்கப்பட்டுள்ள கோழி வளர்ப்புப் பிரிவுகளில் உற்பத்தியான முட்டைகள் 1,33,126. அவைகள் எல்லாம் அங்கே இருக்கிறவர்களுக்கு பெரும்பாலும் உணவுக்காக வழங்கப்படுகிறது. தயாரிக்கப்பட்ட பாத அணிகளின் எண்ணிக்கை 507 ஜோடிகள், காய்கறித் தோட்டங்களிலே விளைவிக்கப்பட்ட காய்கறிகள் 12,849 கிலோ கிராம்.

இதன்னியில் பல்வேறு திட்டங்களில் வேலைக்கு அமர்த்தப்பட்டு அதற்கான ஊதியம் வழங்கப்பட்டிருக்கிறது. மருத்துவத் துணைப் பணியில் 74 பேரும், வேளாண்மைத் தோட்டங்கள் போடுவதில் 230 பேரும், தையல் வேலையில் 30 பேரும், பாத அணி தயாரித்தலில் 47 பேரும், பாய் முடைதலில் 93 பேரும், கோழி வளர்த்தலில் 17 பேரும், தச்சு வேலையில் 12 பேரும், துணி நெய்தலில் 19 பேரும், சமையல் உதவியாளர்கள் என்ற முறையில் 108 பேர்களும், மொத்தம் 630 பேர்கள் வேலை வாய்ப்புப் பணிகளை அங்கே பெற்றிருக்கிறார்கள்.

அவர்களுக்காக தொழிற் கூடங்கள் அமைக்கப்பட வேண்டுமென்ற கருத்து இங்கே தெரிவிக்கப்பட்டது. மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதுபோல் பரனூரில், ஸ்விடிஷ் ரெட்கிராஸ் ரீஹேபிலிடேஷன் இண்டஸ்ட்ரீஸ் மூலம் அளிக்கப்பட்ட தொழிலுதவியை அண்மையிலே பிரதமர் தமிழகத்திற்கு வந்த போது தொடங்கி வைக்கப்பட்டது என்பதையும், அங்கே 80 பேர்கள் பணியாற்றுகிறார்கள் என்பதையும் நீங்கள் அறிவீர்கள்.

இளம் தொழுநோய்ப் பிச்சைக்காரர்களைத் தனியாகக் கவனிக்க வேண்டுமென்று சீனிவாசன் சொன்னார். இன்றைய தினம் சீனிவாசன் அருமையான யோசனைகளை நிதானமாக வழங்கியிருக்கிறார். இளம் தொழுநோய் பிச்சைக்காரர்கள்

தனியாகப் பாதுகாக்கப்பட வேண்டுமென்றும், அவர்களிடமிருந்து இந்த நோய் பரவிவிடாமல் பார்த்துக் கொள்ள வேண்டுமென்றும் சீனிவாசன் சொன்னார். ஏற்கனவே எடுக்கப்படுகிற முயற்சிகளின் தொடர்பாக அதுவும் செய்யப்படும்.

ஆறு ஆயிரத்திலிருந்து 10 ஆயிரம் பேர்கள் வரையில் தொழு நோய்ப் பிச்சைக்காரர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு இடங்களை விரிவுபடுத்த வேண்டுமென்று ஜோதி அம்மையார் அவர்கள் சொன்னார்கள். எல்லாப் பிச்சைக்காரர்களும் அகற்றப்பட வேண்டுமென்ற கருத்தும் அம்மையார் அவர்களால் வலியுறுத்தப்பட்டது. எல்லாப் பிச்சைக்காரர்களும் என்று கணக்கை எடுத்த போது 60 ஆயிரத்திற்குமேல் அவர்களின் எண்ணிக்கை இருக்கிறது. அந்தக் காரணத்தினாலே முதல் கட்டமாக 6 ஆயிரத்திலிருந்து 10 ஆயிரம் வரையில் உள்ள இந்தத் தொழுநோய்ப் பிச்சைக்காரர்களுக்கு மறு வாழ்வு அளித்துத் தீர வேண்டுமென்ற தீர்மானத்திற்கு வந்தோம்.

இப்போது இந்த இல்லங்களிலே 4 ஆயிரம் பேர்கள் இருக்கிறார்கள். மேலும் இப்போது கொண்டுவரப்படக்கூடிய திருத்தம் நிறைவேற்றப்பட்டு, செயல்முறைக்கு வருகிறபோது மீதம் இருக்கிற தொழுநோய்ப் பிச்சைக்காரர்களுக்கும் இப்போது இருக்கிற இடங்களை விரிவுபடுத்த வசதிகள் இருக்கின்றன. தேவைப்படுமானால் புதிய கட்டடங்களைக் கட்டவும் ஆராயலாம். அந்தக் கருத்திலேதான் வட ஆற்காடு மாவட்டத்திலே ஒரு இல்லம் போதாது, இன்னொரு இல்லம் வேண்டுமென்று முஸ்லீம் லீக் கட்சியைச் சேர்ந்த திரு. வகாப் அவர்களும் சொன்னார்கள். இவைகளையெல்லாம் கருத்தில் கொண்டுதான் காரியங்கள் செய்யப்படுகின்றன.

பரனூருக்குச் சென்று பார்த்து வந்தேன், நல்ல முறையிலே பணியாற்றுகிறது என்று இங்கே சொன்னார்கள். இதைப்போலவே ஒவ்வொரு இல்லமும் நல்ல முறையிலே பணியாற்றக் கூடிய முறையிலே, நாங்கள் வருகிறோம் என்று கூடச் சொல்லாமல் திடீர் திடீரென்று பிச்சைக்காரர்கள் இல்லங்களுக்குச் சென்று பார்வையிட்டு குறைகளை அறிந்து உடனுக்குடன் ஆவன செய்ய வேண்டுமென்று நான் ஆகட்டும், இந்தத் துறையைச் சேர்ந்த மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சராகட்டும், அதிகாரிகளாகட்டும் காரியங்களைச் செய்து வருகிறோம். அந்த வகையிலே பொது மக்களுடைய ஒத்துழைப்பு நிரம்பக் கிடைக்க வேண்டும். பொது மக்களுடைய பிரதிநிதிகளுடைய ஒத்துழைப்பும் நிரம்பக் கிடைக்க வேண்டுமென்று கூறி அமைகிறேன்.